வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   21.10.2024 திங்கட்கிழமை   இதழ் : 294   பக்கங்கள் : 12



பாராளுமன்றத் தேர்தல் - 2024
தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறிய பின்னர்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த பாராளுமன்ற தேர்தலில்
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின்
சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது!
தருமலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர்)
5
யாழ் - கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளர்

# அநுரவுடன் சேர்ந்து செயல்படுவதில் பிரச்னை இல்லை!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்ரோபர் 21**

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் சேர்ந்து செயல்படுவதில் எமக்கு எந்தப் பிரச்னையும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறுவதற்கான திறன் எமது கட்சிக்கு அதிகமாக உள்ளது. அவர், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தலைமைத்துவத்துக்கு மிகவும் பொருத்தமான தெரிவாக நாட்டின் அபிவிருத்திக்கான - தெளிவான பார்வையுடன் கூடிய பலமான அணியை ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றிணைத்துள்ளது - என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடந்த சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(ஐ)

# முறைகேடாக சம்பாதித்தவர்களின் சொத்துகளை கைப்பற்ற அமைப்பு!

## அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஒக். 21

அரசியல்வாதிகள், தனிநபர்கள் முறைகேடாக சம்பாதித்த சொத்துகளை கைப்பற்றுவதற்காக புதிதாக ஓர் அமைப்பை அரசாங்கம் நிறுவவுள்ளதாக அறிய வருகின்றது.

அரசியல்வாதிகள், தனிநபர்கள் முறைகேடாக சம்பாதித்த சொத்துகள் தொடர்பில் தகவல் சேகரிக்கவும் அந்த சொத்துகளை பறிமுதல் செய்யவும் அந்த அமைப்புக்கு அதிகாரம் வழங்கப்படும் என்று அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அமைப்பு 'சொத்து மீட்பு' அமைப்பு என்று அழைக்கப்படும். உலகின் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இதுபோன்ற அமைப்பு செயல்பட்டு

11

# ரணில் கோரிய சலுகையை நான் நிராகரித்து விட்டேன்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 163 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 20 வாகனங்கள் உட்பட பல சலுகைகளை கோரினார். அவற்றை நிராகரித்துவிட்டேன் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 163 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 20

11

# யாழ். - கொழும்பு ரயில் சேவை மீண்டும் தாமதம்!

கொழும்பு, ஒக். 21

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான ரயில் சேவை ஆரம்பமாவது மீண்டும் தாமதமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை இடையிலான ரயில் சேவை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை கடந்த ஜனவரி மாதம் நிறுத்தப் பட்டது. மஹவ - அநுராதபுரம் இடையிலான ரயில் பாதை புனரமைப்புப் பணிக்காகவே இந்த ரயில் சேவை நிறுத்தப்பட்டது. ரயில் பாதை

11

# ஐ. எம். எவ்வுடனான அரசின் கொள்கையில் தெளிவில்லை

## சாகல ரத்நாயக்க சாடல்

கொழும்பு, ஒக். 21

சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ. எம். எவ்.) தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை தெளிவில்லாமல் இருப்பதாக புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வழமையாக புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர் புதிய அரசாங்கத்தின் கொள்கையைப் பாராளுமன்றத்திலோ அல்லது வேறு

11

# இலங்கைக்கு இந்திய படையை அனுப்பியது மாபெரும் தவறே!

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கூறினாராம்



கொழும்பு, ஒக். 21

இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பி வைத்தது மாபெரும் தவறு என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.

அவர் எழுதிய, 'தி இந்தியாவே' என்ற நூலிலேயே இந்தத் தகவலை குறிப்பிட்டுள்ளார் என்று 'பாத் பைண்டர்' அறக்கட்டளையால் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட 'இந்திய மாவத்தை'

11

# 'சுவசெரிய' சேவைக்கு மேலும் 50 அம்புலன்ஸ்!

## டாடா நிறுவனம் வழங்குகிறது

கொழும்பு, ஒக். 21

இலங்கைக்கு 50 அம்புலன்ஸ் வாகனங்களை வழங்க இந்தியாவின் பிரபல வாகன உற்பத்தி நிறுவனமான டாடா குழுமம் முடிவு செய்துள்ளது என்று அறிய வருகிறது.

நாட்டில் வெற்றிகரமாக இயங்கிவரும் 'சுவ செரிய' சேவைக்கே இந்த அம்புலன்ஸ்களை

11

# ஜனநாயக த. தே. கூட்டணியின் மட்டு. வேட்பாளர்கள் அறிமுகம்!

மட்டக்களப்பு, ஒக். 21

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளர் கோவிந்தன் கருணாகரம் தலைமையில் அறிமுகக்

11



# சனநாயக தமிழரசினரின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 21

சனநாயக தமிழரசு கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யுத்தத்தில் இன்னுயிரை தியாகம் செய்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு, வேட்பாளர் அறிமுகம் நடைபெற்றது.

இந்த வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் அந்த சுயேச்சை குழுவின் முதன்மை வேட்பாளரான

11

# 'சங்கு' எனக்கு எழுதித் தரப்பட்ட சின்னமல்ல!

## அரியநேத்திரன் சொல்கிறார்

மட்டக்களப்பு, ஒக். 21

சங்கு சின்னம் என்பது எனக்கு எழுதித் தரப்பட்ட சின்னமல்ல. அது ஒரு சுயேச்சையின் சின்னமாகும் - இவ்வாறு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக அந்த சின்னத்தில் போட்டியிட்ட பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சங்கு சின்னத்தை இப்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்கின்ற அமைப்பு பெற்றுள்ளது. அதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவாக களுவாஞ்சிக்குடியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த பரப்புரை கூட்டத்தில் பங்கேற்ற பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமல்ல, வட

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

2015ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் நடைபெற்ற சம்பவம் ஒன்றுதான் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

அப்போது டான் ரீ. வி. அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த ஊடக நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக அங்கு போயிருந்தேன். அங்கே தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஒரு குழுவின் தலைவர் அவரோடு பேசிக் கொண்டிருந்தார்.

புலம்பெயர் மண்ணிலிருந்து யுத்தம் முடிவடைந்த பின்னர் தாயகம் திரும்பி பல்வேறு சமூகப் பணிகளையும் செய்து கொண்டிருந்தவர் அவர். இங்குள்ள தமிழ் கட்சி ஒன்றில் போட்டியிடுவதற்கு முதலில் அவர் முயற்சி செய்துபார்த்தார். பின்னர் தேசியக் கட்சி ஒன்றி லும் முயன்று பார்த்துவிட்டு கடைசியில் சுயேச்சையாகப் போட்டியிட வேட்புமனுவை தாக்கல் செய்திருந்தார். அன்று தான், வேட்புமனு தாக்கல் செய்யும் கடைசிநாள்.

நண்பர் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்த பின்னர், ஒரு பேச்சுக்காகக் கேட்டேன், "எப்படி தேர்தல்... உங்கள் வெற்றியில் நம்பிக்கையாக இருக்கின்றீர்களா?" என்று. அவர் எந்தத் தயக்கமும் இன்றி சொன்னார்: "பத்து இடங்களையும் கைப்பற்றுவம்..".

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. அப்போது யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஏழு எம். பிக்களை தெரிவு செய்வதற்காகத்தான் தேர்தல் நடக்கின்றது. ஆனால், வேட்புமனுவில் பத்துப் பேரின் பெயர்களைப் போடவேண்டும் என்பதுதான் நான் அறிந்தது. இவர் என்ன பத்து இடங்களிலும் தான் வெல்லுவேன் என்கிறார்? என்று எனக்குள் நினைத்தபோது, எதிரே இருந்த ஊடக நண்பர் சொன்னார்: "அண்ணே, நீங்கள் வேட்புமனுவில் பத்துப் பேரை போட்டாலும் அதில ஏழு பேர்தான் எம்.பியாக தெரிவு செய்யப்படுவினம். யாழ்ப்பாணத்துக்கு ஏழு எம்.பிக்கள் தானே?" என்றார்.

அப்போதுதான் அவருக்கு அந்த விசயமே தெரியவந்தது. பிறகு சொன்னார், "அப்ப ஏழும் எங்களுக்குத்தான்..." என்று.

நான் சொன்னேன், "இரண்டாயிரம் வாக்குகள் கிடைச்சால் பெரிய விசயம் அண்ணே..." என்று. அவருக்கு அடக்க முடியாத கோபம். உடனே, எழுந்துவிட்டார்.

"இப்பிடி அறிவில்லாத ஆட்களை எல்லாம் நண்பராக வைச்சிருக்கிறீர்போல..." என்று எனது ஊடக நண்பரை ஏசிவிட்டு அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

பின்னர், தேர்தல் பிரசாரத்திற்காக துரையப்பா விளையாட்டரங்கில் தமிழகத்திலிருந்து பிரபல இசைக்குழுவையும் நகைச்சுவை நடிகர் செந்திலையும் அழைத்திருந்தார். நீண்டகாலத்துக்குப் பின்னர் தமிழக இசைக் கலைஞர்களை காண மக்கள் திரண்டிருந்தனர். அங்கேயும் அவரை சந்தித்தபோது சொன்னார்: "பார்த்தீரா 'ஐசே' சனத்தை.. இப்பயாவது நம்புகிறீரா?" என்றார்.

தேர்தலில் அவருக்கு கிடைத்தது ஆயிரத்து நூறு வாக்குகள் தான்.

இந்தச் சம்பவம்தான் அந்த வேட்பாளரின் பேட்டியைப் பாத்தபோது ஞாபகத்துக்கு வந்தது. சுயேச்சையாகப் போட்டி யிடும் குழு ஒன்றின் தலைவர் அந்தப் பேட்டியில் "எங்களுக்கு ஆறு 'சீற்' கள் கிடைக்கும்" - என்றார்.

தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் யாரைப் பாத்தாலும், இப்படித்தான் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அவர் முன்னணிக் கட்சிகளில் போட்டியிடுகின்றவராக இருந்தாலும் சரி, சுயேச்சையாகப் போட்டியிடுகின்றவராக இருந்தாலும் சரி இதையேதான் சொல்கிறார்கள்.

முக்கிய கட்சி ஒன்றில் போட்டியிடும் இளம் தலைமுறை வேட்பாளர் ஒருவரை நேற்று சந்திக்க முடிந்தது. அவரிடம் நான் கேட்க நினைத்ததை அவரே என்னிடம் கேட்டார்.

"எங்களுக்கு ரெண்டு வரும் என்று நினைக்கின்றீர்களா?".

"இந்தத் தடவை முதலிடத்துக்கு வரலாம் என்று நம்பப்படுகின்ற கட்சிகளில் மூன்று கட்சிகள் உண்டு. அதில் யார் முதலாவதாக வருவார்கள் என்பது இப்போது சொல்வது கடினம் தான். முதலாவதாக வருபவருக்கு இரண்டு கிடைக்கும்" என்றேன்.

அவர் எதனை அடுத்ததாக கேட்கப்போகிறார் என்பதும் தெரிந்ததுதான். நான் நினைத்துக்கொண்டிருக்க அவரே கேட்டார்.

"சரி எங்களுக்கு ஒன்றுதான் வருகின்றது என்றால், அதில் யார் வருவார்கள்?".

அதற்கும் நான் சொன்ன பதில் அவருக்கு திருப்தியாக இருந்திருக்கவேண்டும்.

"முதலாவது தெரிவை மாத்திரம் கணக்கில் எடுத்தால் அவர் தான் வருவார். ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் அப்படி இல்லையே. முதல் இரண்டிலும் வருபவர்களை விட மற்றைய ஏழு பேரும் ஒருவர் வெற்றி பெறுவதற்காக- அவர்களின் இரண்டாவது விருப்பு வாக்கைப் பெறுவதற்காக களமிறக்கப்பட்டவர்கள் என்பதால், மற்றைய ஏழு பேரும் எவ்வளவு வாக்குகளை பெறுகிறார்கள் என்பதைப் பொறுத்துதான் யார் வெற்றி பெறுவார் என்பதை சொல்ல முடியும்."

சிரித்துக்கொண்டே விடைபெற்றார் அவர்.

- ஊர்க்குருவி.

# உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே வாக்களிக்க வேண்டும்

### மன்னார் மறைமாவட்ட ஆயர் வலியுறுத்தல்

மன்னார், ஒக். 21

நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்தில் கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை பாராளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.



பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் ஆயர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டு மக்களாகிய நாம் மீண்டுமொரு தேர்தலை எதிர்நோக்கி நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு இப்போது பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கிறோம்.

வடக்கு மாகாணத்தில் வன்னி தேர்தல் மாவட்டம் மற்றும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் என இரண்டிலும் சேர்த்து குறித்தொதுக்கப்பட்டுள்ள 12 ஆசனங்களுக்காக 45 அரசியல் கட்சிகளும் 46 சுயேச்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன. வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் 800இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களம் காண்கின்றனர்.

உரிமை மறுப்புக்கு இலக்கான சிறுபான்மை மக்களாகிய நாம் நமது அனைத்து வகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆக்கபூர்வமான வழிமுறை அரசியல் தான். இந்த அரசியல் பிரதிநிதிகளாக போட்டியிடுகின்ற அனைவரும் அதன் கனதியை உணர்ந்தவர்களா? என்பது கேள்விக்குறியே.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்புமுனைகள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தலின் போது தெற்கில் ஏற்பட்ட அரசியல் சிந்தனை மற்றும் வடக்கு, கிழக்கிலும் இந்தத் தேர்தலில் ஏற்பட வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது.

அதேவேளை என்றுமில்லாதவாறு அதிக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள இத்தேர்தல் பொதுமக்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் யாருக்கு வாக்களிக்கக் கூடாது, என்பதையும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் வாக்காளர்கள் தமது கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். 30 வருட அகிம்சை போராட்டமும் 30 வருட ஆயுதப் போராட்டமும் எதற்காக ஏற்பட்டனவோ அந்தக் காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளன.

இவ்வேளையில் நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை பாராளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# இலங்கையை சேர்ந்தோருக்கும் கலாம் விருதுகள் அறிவிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 21

இந்தியாவின் பாண்டிச்சேரியை (புதுச்சேரி) மையமாகக் கொண்ட திருவள்ளுவர் உலக சாதனையாளர் அமைப்பு இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான அப்துல் கலாம் நினைவாக கலாம் விருதுகளை வழங்கி வருகிறது.

இதில், இலங்கையின் இலக்கியத் துறையை சார்ந்தோருக்கும் கலாம் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி புதுவை தமிழ்ச் சங்கத்தில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி, கவிதாயினி சிவரூபன் சர்வேஸ்வரி, கலாநிதி சூரியகுமாரி இராசேந்திரம், நெடுந்தீவு செ. மகேஷ் ஆகியோர் கலாம் சாதனை ரத்னா விருதுகள் பெறவுள்ளனர்.

கவிஞர் வி. அபிவர்ணா, அரியநாயகம் சிறீதர், கவிஞர் குமாரவேலு டனீஸ்வரன், கலாநிதி சூரியகுமாரி இராசேந்திரம் ஆகியோர் கலாம் சாதனையாளர் விருதுகள் பெறவுள்ளனர்.

# போக்குவரத்து பொலிஸாரை கண்காணிக்க பொறிமுறை!

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு மாகாண வீதிப் போக்குவரத்து பொலிஸாரை அவர்களின் கடமை நேரத்தில் இறுக்கமாகக் கண்காணிக்கும் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப திணைக்களத்தின் உதவியுடன், பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வைத்து இந்தத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் நகர்வுகளையும் செயல்பாடுகளையும் கண்காணிக்கும் விதமாகவும் சேவையை பரவலாக்கம் செய்யும் வகையிலும் கடமைநேரத் துஷ்பிரயோகங்களை தவிர்க்கும் வகையிலும் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிக் கண்காணிப்பு பொலிஸாரின் நகர்வுகள் மற்றும் அவர்களின் இட அமைவுகள் என்பவற்றை அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு திரையில் காணக் கூடியவாறு இந்தத் தொழில்நுட்பத் திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்துப் பொலிஸார் ஓர் இடத்திலேயே நீண்டநேரம் தரித்து நிற்கின்றனர் என்றும், அவர்கள் வாகன நெருக்கடி மிகுந்த பகுதிகளில் சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் நீண்டநாட்களாக பொது மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்த முறைப்பாட்டுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இறைச்சிக்காக மாடு திருடிய மூவர் கைது!

முல்லைத்தீவு, ஒக். 21

இறைச்சிக்காக பொது மக்களின் மாடுகளை திருடிய குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்களை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் பல நாட்களாக புதுக்குடியிருப்பில் மாடுகளை திருடி இறைச்சியாக்கி வந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மூவரை சந்தேகத்தின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 20.10.2024 திங்கட்கிழமை ඊළනාඩු
பிலவ வருடம், ஐப்பசி 4

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அடுத்த பாராளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம்

வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலுமாக ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் முன்னென்றும் இல்லாத வகையில் பெருவாரியான தமிழ் அரசியல் கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் போட்டியிடுவதன் காரணமாக அடுத்த பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பாரதூரமான அளவுக்கு சிதறடிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. தமிழ் மக்களின் அரசியல் நலன்களில் மானசீகமான அக்கறை கொண்டிருப்பவர்களுக்கு இந்தத் துரதிர்ஷ்டவசமான நிலவரம் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இத்தகைய ஒரு பின்புலத்தில், தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சிவஞானம் சிறீதரனும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் குறித்துத் தெரிவித்திருக்கும் கருத்துகள் கவனத்தை ஈர்த்திருக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இந்தத் தடவை பாராளுமன்றத்துக்கு 18 தமிழ் உறுப்பினர்கள் தெரிவாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றும் அதில் பத்து ஆசனங்களை கைப்பற்றும் இலக்குடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது எனவும் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்றைய தினம் வழங்கிய நேர்காணலில் பொன்னம்பலம் கூறியிருக்கிறார்.

இதேவேளை, கடந்த வாரம் யாழ். நகரில் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற தமிழ் அரசு கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் உரையாற்றிய சிறீதரன் இந்தத் தடவை தங்களது கட்சிக்கு பாராளுமன்றத்தில் 15 ஆசனங்கள் கிடைக்க வேண்டும் என்று தனது எதிர்பார்ப்பையும் வெளியிட்டார்.

பொன்னம்பலத்தையும் சிறீதரனையும் பொறுத்தவரை, தங்களது கட்சிகள் தமிழ்ப் பகுதிகளில் எத்தனை ஆசனங்களைப் பெறவேண்டும் என்று ஆசைப் படுவதற்கு உரிமை இருக்கிறது. அதை யாரும் கேள்விக்கு உட்படுத்தமுடியாது. ஆனால், வடக்கு - கிழக்கின் இன்றைய அரசியல் சூழ்நிலையை சரியாகப் புரிந்து கொண்டுதான் அவர்கள் இருவரும் கருத்துகளை வெளியிடுகிறார்களா என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசு கட்சியையும் உள்ளடக்கியதாக இருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு பத்து ஆசனங்களே கிடைத்தன. அதேவேளை, பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் ஓர் ஆசனத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. தேசிய ரீதியில் அந்தக் கட்சிக்குக் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியல் மூலமாக ஓர் ஆசனம் கிடைத்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றைய தமிழ்க் கட்சிகள் போன்று சிதறுப்படாமல் மட்டுப்படுத்தப்பட்ட அளவு உறுப்பினர்களுடன் கட்டுக்கோப்பாக இருப்பதால் முன்னைய பாராளுமன்றத் தேர்தல்களை விடவும் இந்தத் தடவை தமிழ் மக்கள் தங்களுக்கு கூடுதலான ஆதரவைத் தருவார்கள் என்று பொன்னம்பலம் நம்புகிறார் போலும்.

ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஏனைய அங்கத்துவக் கட்சிகளை விட்டு, கடந்த வருட முற்பகுதியில் வெளியேறி - தனித்துச் செயல்பட்டு வந்த தமிழ் அரசுக் கட்சி அதன் சுமார் முக்கால் நூற்றாண்டு வரலாற்றில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு தலைமைத்துவ போட்டியின் விளைவாக உட்பூசலில் சிக்குப்பட்டிருக்கும் ஒருநேரத்தில் 15 ஆசனங்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று சிறீதரன் எந்த அடிப்படையில் எதிர்பார்ப்பை வெளிப்படுத்தினார் என்று உண்மையில் புரிந்துகொள்ள முடியவில்லை. தங்களுக்குள் நிலவும் பூசல்களை தமிழ் மக்கள் கருத்தில் எடுக்காமல் தமிழ் அரசு கட்சியின் பாரம்பரியத்துக்காக தொடர்ந்தும் ஆதரவைத் தருவார்கள் என்று சிறீதரன் நம்புகிறாரோ?

இந்தத் தடவை பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கின் ஐந்து மாவட்டங்களிலும் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள், குழுக்களின் எண்ணிக்கை உண்மையில் தமிழ் மக்களின் விவேகத்தை ஏன் பகுத்தறிவையும்கூட அவமதிப்பதாக அமைந்திருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் ஆறு ஆசனங்களுக்கு 400 வரையான வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

தமிழ் மக்களின் ஐக்கியத்தின் அவசியத்தை பேசிக்கொண்டே தினமும் தமிழ்க் கட்சிகள் சிதறிக்கொண்டிருக்கின்றன. அடுத்த பாராளுமன்றத்தில் தங்களுக்கு கட்டுக்கோப்பான ஒரு பிரதிநிதித்துவம் இல்லாமல் போகக்கூடிய ஆபத்தை உணர்ந்தவர்களாக இரு மாகாணங்களினதும் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்துவார்களா என்ற சந்தேகமும் எழுகிறது. ஏனென்றால், முன்னொருபோதும் இல்லாத வகையில் தமிழ் அரசியல் "வெளிப் பணத்துக்கு" வாலாட்டும் பிரகிருதிகளின் கையில் சிக்கியிருக்கிறது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்



வடமராட்சி, ஒக். 21

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி முதியவர்களுக்கு வழங்குவதற்கென தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஒரு தொகுதி படுக்கை விரிப்புகள், சேலைகள் என்பன வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர், கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த நிகழ்வில், உதவித் திட்டங்களாக,

வடமராட்சி பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களின் கோரிக்கைக்கு அமைவாக 87, 500 ரூபாய் பெறுமதியான 35 படுக்கை விரிப்புகள், 35 சேலைகள் என்பன வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தை ஆச்சிரம முதல்வர் மோகன தாஸ் சுவாமிகள் முன்னிலையில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆங்கில போதனாசிரியர் ச. விநாயகமூர்த்தி, வடமராட்சி கந்த புராணக்கழக ஏற்பாட்டாளர் ஐங்கரன் ஆகியோர் பிரதேச செயலகங்களின் அதிகாரிகளிடம் வழங்கி வைத்தனர். (எ-02)

# தென்மராட்சி மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவு



யாழ்ப்பாணம், ஒக். 21

தென்மராட்சி கலாசார மத்திய நிலைய நிலையத்தின் கீழ் உள்ள கைதடி கிராமிய நிலையம், தில்லானா குழு நடனம் முதலாம் இடத்தையும் வாள் நடனம் இரண்டாம் இடத்தையும் பெற்று அனைத்து போட்டிகளும் தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளன.

புத்தசாசன சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் நாடளாவிய ரீதியில் உள்ள கலாசார மத்திய நிலையங்களுக்கு இடையில் நடத்தப்படும் பிரதீபா விருதுக்கான போட்டிகள் நேற்று முன்தினம் அளவெட்டி அருணோதய கல்லூரியில் நடைபெற்றன.

இந்தப் போட்டியில் தென்மராட்சி கலாசார மத்திய நிலைய மாணவர்கள், மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகினர்.

அந்தவகையில் கிராமிய குழுப் பாடல் போட்டியில் ஆரம்பப் பிரிவு வரணி மாணவர்கள் - முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகினர்.

அதேவேளை, மிருதங்கப் போட்டியில் வரணி மாணவன் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளார்

அத்துடன் கிராமிய குழு பாடல் போட்டியில் கனிஷ்ட பிரிவு - வரணி மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகினர்.

இப்போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்களுக்கும் இவற்றை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் மாணவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோருக்கும் நிலைய பொறுப்பதிகாரியும் உத்தியோகத்தர்களும் நன்றிகளைத் தெரிவித்தனர். (எ-05)

# 10 லீற்றர் கசிப்புடன் யாழில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தில் 10 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். சூரிய பண்டாரவுக்கு கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நேற் றைய தினம் இவர் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊரெழு அம் மன் கோவிலுக்கு அருகாமை யில் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த 42 வயதுடைய நபரே 10 லீற்றர் கசிப் புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேல திக விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ-05)



# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 21 திங்கட்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 04
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : பஞ்சமி




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த மனக் குழப்பம் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். மேலதிகாரி ஒத்துழைப்பார்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். ரகசியங்களை வெளியிட வேண்டாம். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். மேலதிகாரிகளிடம் விவாதம் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதிக்கும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளிடம் கோபத்தை காட்டாதீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

# வட மாகாணத்தில் அடிக்கடி மழை பெய்யும்

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு மாகாணத்தில் அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என சிரேஷ்ட வானிலை அதிகாரி, கலாநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் அத்துடன் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும்.

ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் ஊடாக புத்தளம் வரையான அத்துடன் அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 40 - 45 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற வேளைகளில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்"- என்றார். (எ)

# யாழில் விபத்தில் சிக்கிய பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம், கட்டப்பிராய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

பருத்தித்துறையிலிருந்து யாழ். நகர் நோக்கி பயணித்த ஓட்டோ வீதியைக் கடக்க முற்பட்ட பெண்ணின் மீது மோதியதில் இவ்விபத்து சம்பவித்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் பலத்த காயமடைந்த பெண், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - கட்டப்பிராய் பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

ஓட்டோ சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

### இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிய

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஒக். 21

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை உயிரிழந்தார்.

வேரவில் - பூநகரி பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய, மூன்று பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.


கடந்த 11ஆம் திகதி இந்த நபர் வேரவில் பகுதியில் இருந்து முழங்காவில் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தார்.

இதன்போது முழங்காவில் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள மஞ்சள் கோட்டின் ஊடாக வலது பக்கம் திருப்ப முற்பட்ட வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார்.

இந்த நிலையில், முழங்காவில் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இருப்பினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)

# இரத்த பரிசோதகரை மாற்றாதீர் அச்சுவேலி மக்கள் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 21

அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் இரத்தப் பரிசோதகரை மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மருத்துவமனையில் புதிதாக ஆய்வுகூடத்தில் இரத்த பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், இரத்த பரிசோதகரை தெல்லிப்பழைக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றிடத்துக்கு புதிதாக ஒருவரை நியமிக்க இரண்டு மாதங்களுக்கு மேலாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனால் இரத்த மாதிரிகளை வேறிடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும், அல்லது நோயாளர்கள் பணம் கொடுத்து வேறு இடங்களில் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மருத்துவமனையில் டெங்கு, மலேரியா நோய்கள் குறித்த பரிசோதனை உட்பட பல்வேறு பரிசோதனைகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மாற்றப்படும் பரிசோதகருக்கு பதிலாக எவரும் நியமிக்கப்படவில்லை.

எனவே, இந்த அநீதியான நடவடிக்கைக்கு நீதி கிடைக்க வேண்டும் எனக் கோரியும் இந்த மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு எதிராக திருட்டு, ஊழல் மோசடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் பரவிய தீயில் சிக்கி தாய், தந்தை, மகள் மரணம்!

## தாயின் கழுத்தில் வெட்டுக்காயங்கள்

சிலாபம், ஒக். 21

**வீடொன்றில் பரவிய தீயில் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சடலமாக மீட்கப்பட்ட தாயின் கழுத்தில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று கூறப்படுகின்றது.**

புத்தளம் - சிலாபம் - சிங்கபுரம் பகுதியில் இடம்பெற்ற இந்தத் தீ விபத்தில் 42 வயதான தந்தை, 40 வயதான தாய், 15 வயதான அவர்களின் மகள் ஆகியோரே உயிரிழந்தனர்.

மாடி வீடு ஒன்றிலேயே இந்தத் தீ பரவியிருந்தது. கீழ் மாடியின் அறை ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட தாயின் கழுத்தில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வீட்டின் வரவேற்பறையில் தந்தை, மகளின் சடலங்கள் எரிந்த நிலையில் மீட்கப்பட்டன.

இது திட்டமிட்ட கொலையாக இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தேர்தல் முறைப்பாடு 400ஐ தாண்டியது!

கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 400ஐ கடந்துள்ளது.

இதனடிப்படையில், இதுவரை 401 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 158 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 243 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 58 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், இதுவரை தேர்தல் குறித்த வன்முறை சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளது. இதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 309 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 92 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ஐ)

# 8 அரச வாகனங்களையே மகிந்த மீள வழங்கினார்!

## அரச தகவல் திணைக்களம்

கொழும்பு, ஒக். 21

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வசமிருந்த 8 அரச வாகனங்கள் மீள ஒப்படைக்கப்பட்டன. மேலும் 8 வாகனங்கள் அவர் வசம் இருக்கின்றன என்று அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வசம் 11 அரச வாகனங்கள் தற்போது உள்ளன என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஜனாதிபதிக்கு உள்ள உரிமைகள் சட்டத்துக்கு அமைவாக மகிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் தம்வசமுள்ள மேலதிக வாகனங்களை மீள ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 6 அரச வாகனங்களே மகிந்த வசமுள்ளன!

கொழும்பு, ஒக். 21

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாவனை மற்றும் பாதுகாப்புக்காக தற்போது ஆறு வாகனங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன என்று அவரின் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

ஜனாதிபதி செயலகம் வழங்கிய பணிப்புரைக்கு அமைய, ஆறு வாகனங்களில் அம்புலன்ஸ் உட்பட 3 வாகனங்களை நாளை (இன்று) வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், இதனை ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஒழுங்கற்ற வேலைத்திட்டதால் ராடரை இழந்தது இலங்கை!

## வானிலை முன்னறிவிப்பு குறித்த சிக்கல்களுக்கு இதுவே காரணம்!

கொழும்பு, ஒக். 21

வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஒழுங்கற்ற வேலைத் திட்டம் காரணமாக, முன்னறிவிப்புகள் மற்றும் கணிப்புகளின் துல்லியம் தொடர்பில் சிக்கல்கள் தோன்றியதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

ஜப்பானில் இருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய டொப்ளர் ராடர் அமைப்பையும் நாடு இழந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் வானிலை முன்னறிவிப்புகளின் துல்லியத்தை பராமரிக்க அதிநவீன உபகரணங்கள் இன்றியமையாதவை, ஆனால் நாட்டின் வளிமண்டலவியல் திணைக்களம் அத்தகைய கருவிகளைக் கொண்டிருக்கவில்லை.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள 122 தானியங்கி மழை மானிகளில் 70 மழை மானிகள் மாத்திரமே 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரை செயல்பட்டன.

அதன்படி கடந்த ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி வரை சுமார் 52 மழை மானிகள் செயல்படாமல் இருந்த நிலையில் 36 மழை மானிகள் மட்டுமே பராமரிக்கப்பட்டு வந்தன.

மேலும், நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள 453 வழக்கமான மழை மானிகளில் 44 தொடர்ச்சியாக தரவுகளை வழங்குவதில்லை மற்றும் அவற்றின் பராமரிப்புப் பணிகள் கூட செய்யப்படவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் வானிலை முன்னறிவிப்பில் இன்றியமையாத தொழில்நுட்பமான டொப்ளர் ரேடார் முறைமை இன்றி இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் 15 வருடங்களாக முன்னறிவிப்புகள் மற்றும் கணிப்புகளை வழங்கி வருகின்றமை குறித்தும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டளவில் புத்தளம் மற்றும் பொத்துவில் வானிலை ஆய்வு தளத்தில் 2 டொப்ளர் ரேடார் அமைப்புகளை நிர்மாணிப்பதற்கு, ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனத்துடன் வளிமண்டலவியல் திணைக்களம் 2017 ஆம் ஆண்டு உடன்படிக்கை செய்துள்ளது. இதற்கான உதவித் தொகையாகக் கிடைத்த தொகை 563. 58 மில்லியன் ரூபாயாகும்.

ஆனால், நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்த காலம் முடியும் வரை 3 இலட்சத்து 70 ஆயிரத்து 161 ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

ஒப்பந்த காலத்துக்குள் 2 டொப்ளர் ரேடர் அமைப்புகளின் கட்டுமானப் பணியை முடிக்காததால், அது தொடர்பான உபகரணங்கள் மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பு பிரச்னையும் எழுந்துள்ளது. இதன்படி, 2 டொப்ளர் ரேடர் சிஷ்டம்களை நிறுவாமல், 2022இல் ஒன்றை மட்டும் நிறுவ ஜெய்க்கா ஒப்புக்கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# 550 அடிப்படைவாத குழுக்கள் நாட்டில் செயல்படுகின்றன!

## ஞானசார தேரர் சொல்கிறார்

கொழும்பு, ஒக். 21

நாட்டில் 550 அடிப்படைவாதக் குழுக்கள் செயல்படுகின்றன. இதனைக் கூறுவதற்கு அச்சப்பட வேண்டாம் என்று பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அஹூங்கல்ல வெலிகந்த புராண சுதர்ஷனாராம விகாரையில் நடந்த வழிபாடு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல நாடுகளில் பௌத்தம் அழிந்து கொண்டிருக்கும் வேளையில் சிங்களவரான நாம் மட்டும் 2500 வருடங்களாக உயிர் தியாகம் செய்து பௌத்தத்தை பாதுகாத்தோம்.

அது நமது பாரம்பரியம். காலனியாதிக்க காலத்திலும், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இந்த தர்மத்தை போராடி பாதுகாத்தனர். நமது பௌத்தர்கள் சட்டத்தை பாதுகாத்தனர்.

முஸ்லிம்கள் ஒருநாளைக்கு ஐந்து முறை பிரார்த்தனை செய்கிறார்கள். எவ்வளவு நஷ்டம் வந்தாலும் வெள்ளிக்கிழமைக் குச் பள்ளிவாசல்களுக்கு செல்கின்றனர். கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்துக்கு செல்கிறார்கள். இந்துக்களும் அப்படித்தான். அவர்களின் நல்ல உதாரணத்தை நாம் ஏன் எடுக்கக்கூடாது.

நமது பாரம்பரியத்தை நம் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும். பழங்கால பொருட்கள் அழிக்கப்படுகின்றன. பௌத்த பாரம்பரியம் அழிக்கப்படுகிறது. அதனால்தான் பொதுபல சேனா உருவாக்கப்பட்டது. இந்த தேசிய வேலைத்திட்டத்தினால் பொலிஸார் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது - தனிப்பட்ட விசயங்களுக்காக அல்ல - என்றார். (ஐ)

# வாடகை வருமான வரி திட்டம் கைவிடப்படும்!

## திறைசேரி பிரதி செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த வாடகை வருமான வரி திட்டத்தை கைவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என திறைசேரியின் பிரதிசெயலாளர் ஆர். எம். பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்மொழிந்த வாடகை வருமான வரி திட்டத்தை மாற்றீடு செய்வதற்காக புதிய யோசனைகள் குறித்து ஆராயப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

முன்னைய அரசாங்கத்தின் யோசனையை தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்காது. சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த மதிப்பாய்வில் சமர்ப்பிப்பதற்காக அரசாங்கம் பல மாற்று யோசனைகளை ஆராய்ந்து வருகிறது. முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த வாடகை வருமான வரி திட்டத்துக்கு பதில் திறைசேரி அதிகாரிகள் பல மாற்றுயோசனைகளை ஆராய்ந்து வருகின்றனர்.

அரசாங்கம் புதிய திட்டங்களை முன்வைக்கவேண்டும் என சர்வதேச நாணயநிதியம் எதிர்பார்க்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த-மூன்றாவது மதிப்பாய்வுக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை- என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தை மலினப்படுத்த சூட்சுமமாக காய்நகர்த்தும் ஜே. வி. பி!

## சீ. வீ. கே. சிவஞானம் சாடல்

யாழ்ப்பாணம், ஒக். 21

**தமிழ்த் தேசியத்தை மலினப்படுத்துவதற்கு ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சூட்சுமமாக காய்களை நகர்த்தி வருகின்றது. அந்தச் செயல்பாடு தமிழினத்தின் இருப்புக்கு மிகப் பெரிய ஆபத்து என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் கூறியுள்ளார்.**

அவரிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜே. வி. பியானது தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையில் தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கிறது. அந்தத் தரப்பு பாராளுமன்றத்துக்கும் அதிகாரம் கோரி இப்போது தமிழ் மக்களை நோக்கி நகர ஆரம்பித்திருக்கிறது.

ஜே. வி. பியை பொறுத்தவரையில் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்துக்குள் சங்கமிக்க வேண்டும் என்பதே கோரிக்கையாக உள்ளது. தமிழ் மக்கள் தங்களுடைய தனித்துவத்தையும் இருப்பையும் அடையாளத்தையும் உறுதி செய்வதற்காகவே கடந்த ஏழு தசாப்தங்களாக போராடி வருகின்றார்கள்.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் இதுவரையில் பூர்த்தி செய்யப்படாத நிலைமையே காணப்படுகிறது. அவர்களின் பிரச்னைகளுக்குரிய தீர்வு வழங்கப்படவில்லை. ஜே. வி. பியிடம் அது குறீத்த தெளிவான நிலைப்பாடு இல்லை. அத்தகையதொரு நிலைமையில், தமிழர்களை ஜே.வி.பியின் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் சங்கமிக்க வைக்கும் முயற்சியானது தமிழ்த் தேசியத்தை மலினப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது.



ஆகவே, இந்த விடயத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தெளிவுற வேண்டியது அவசியமானது. மாற்றம் அவசியம் என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியத்தை பெருந் தேசியத்துக்குள் கரைக்கும் சூட்சுமமான நகர்வுகளுக்கு துணை போகக் கூடாது. அவ்விதமான நிலைமை ஏற்படுமாயின், தமிழினத்தின் இருப்புக்கே ஆபத்தாகிவிடும் - என்றார்.

(ஐ)

# சிறீதரன் வெற்றி பெற்றால் பதவி பறிக்கப்படக்கூடும்!

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், ஒக். 21

இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சிறீதரன் வெற்றி பெற்றால் பதவி பறிக்கப்படலாம் என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர் ப. கஜதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ் அரசுக் கட்சியில் சி. சிறீதரன், மாவை சேனாதிராசா, சிறீநேசன் உள்ளிட்டோருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைக்கு கட்சி கடிதங்களை அனுப்பியுள்ளது. இனை எங்களால் உறுதி செய்ய முடியும்.

நீங்கள் தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை முடிவுகளை மீறி இருக்கின்றீர்கள். அப்படி செய்ய முடியாது என்பது தொடர்பாக அவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் கட்சியின் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் விளக்கம் கோரியிருக்கிறார். இதனால் தமிழ் அரசுக் கட்சியில் இருக்கின்ற பிரச்னைகள் உலகறிந்தது.

இதில், நீதிமன்ற வழக்குகள் பிரசித்தமானவை. தொடர்ச்சியாக வழக்குகள் போடப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இதனால் தேர்தலுக்குப் பின்னர் நடக்கக்கூடிய சம்பவங்கள் மிக வேடிக்கையாக இருக்கும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

இந்த ஒழுக்காற்று விசாரணையின் ஊடாக அநேகமாக பலர் ஓரங்கட்டப்பட்டிருக்கின்ற நிலையில் சிறீதரன் மாத்திரம் உள்வாங்கப்பட்டிருக்கிறார். சில வேளைகளில் சிறீதரன் தங்களுடைய வேட்பாளர்கள் அத்தனை பேரையும்விட வாக்குகளை கவரக்கூடியவராக இருப்பார் என அவர்கள் நினைத்திருக்கக்கூடும். அதன் அடிப்படையில் அவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார்.

எனவே, சிறீதரன் வெற்றி பெற்றாலும் தேர்தலுக்குப் பிறகு அநேகமாக நான் நம்புகின்ற ஒரு விடயம் ஒழுக்காற்று விசாரணை மூலமாக பதவியைக் கிடைக்காமல் செய்யக்கூடும் என்பதுதான் - என்றார்.

(ஐ)

# என்னுடைய நம்பிக்கையை மக்கள் வீணாக்கியதில்லை!

## டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 21

தீவக மக்களின் உணர்வுகளிலிருந்து அவர்களின் குரலாக 90களிலிருந்து நான் ஒலித்துக் கொண்டிருக்கிறேன். இதே போன்று எனது நம்பிக்கையை அவர்கள் வீணாக்கியது கிடையாது இவ்வாறு கூறியுள்ளார் ஈ. பி. டி. பியின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா.

வேலணை - நாரந்தனையில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு நான் சரியான வழிநடத்தலையும் வழிமுறையையுமே வழங்கி வருகின்றேன். அதனால்தான், தீவக மக்கள் எனது சேவைக்கு இன்னும் பக்கபலமாக இருந்து என்னை பாராளுமன்றுக்கு அனுப்பி வருகின்றார்கள். இம்முறையும் அந்த ஆதரவு தொடரும் என வலுவாக நம்புகிறேன் - என்றார்.

ஈ.பி.டிபியின் தேசிய நல்லிணக்கம் மத்திய அரசுடன் மட்டுமல்லாது ஏனைய இன மக்கள் மத்தியிலும் எப்போதும் வலுவாகவே இருக்கின்றது. அதனால்தான் மக்கள் வழங்குகின்ற ஆணையின் பலத்தின் அடிப்படையிலேயே மத்தியில் உள்ள அரசாங்கத்தோடு ஆட்சியில் பங்கெடுப்பதற்கும், பேரம் பேசலுக்கும் பாராளுமன்ற தேர்தல்களில் அதிகரித்த ஆசனங்களை வழங்குங்கள் எனவும் கோரி வருகின்றேன்.

இதனடிப்படையில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில், யதார்த்த அரசியலையும், ஈ. பி. டி. பி. கட்சியின் அரசியல் செயல்பாடுகளில் இருக்கின்ற நியாயத்தையும் புரிந்து கொண்டு உங்களது ஆதரவு பலத்தையும் வழங்கவேண்டும் - என்றார்.

(ஐ - 05)

# தமிழ்த் தேசிய கட்சிகளின் கொள்கை ரீதியான ஒற்றுமை தவிர்க்கமுடியாதது

## தவராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21


தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் கட்சி ரீதியாக இல்லாவிட்டாலும் கொள்கை ரீதியாக ஒன்றுபடுவது தவிர்க்க முடியாதது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாய தமிழ் அரசு கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் கே. வி. தவராசா.

தென்னிலங்கை கட்சிகளும் அரசியல்வாதிகளும் தங்களின் நிகழ்ச்சி நிரல்களை தமிழர் பகுதிகளில் மிகநிதானமாக நகர்த்தி வருகின்றனர். அவர்களுக்கு வசைபாடுவதற்கும் அவர்களுடன் சேர்ந்து தமிழர்களின் வரலாறுகளை திரிபுபடுத்த துணை போவதற்கும் ஒரு கூட்டம் இருக்கின்றது.

எமது மக்கள் காலம் காலமாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தவர்களாக இருந்து வருகின்றனர். இந்தத் துயரநிலை தொடர்ந்தும் நீடிக்கமுடியாது. ஆகவே நாம் அனைவரும் குறைகூறுபவர்களாக இருக்காமல் எமது மக்களின் குறைகளையும் வேதனைகளையும் எப்படித் தீர்க்கலாம் என்பது பற்றி நிதானமாக முடிவெடுக்க வேண்டியவர்களாக மாறவேண்டும்.

இன்று நாம் அனைவரும் ஓர் இக்கட்டான காலகட்டத்தில் இருக்கின்றோம். எங்களுடைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றுமையின்மை என்பது எமது மக்களுக்கான மிகப்பெரும் சாபக்கேடாக மாறியிருக்கின்றது. இந்தக் கொடிய நிலை ஆட்சியாளர்களுக்கும் தென்னிலங்கை பேரினவாத கட்சிகளுக்கும் ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் கட்சி ரீதியாக இல்லாவிட்டாலும் கொள்கை ரீதியாக ஒன்றுபடுவது தவிர்க்க முடியாததொன்றாகும். ஆகவே, இங்கு நான் முக்கியமாகக்கூற முற்படுவது. சில தமிழ்த் தேசியக் கட்சிகள் காணி, பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட மாகாண சபை முறைமையை ஏற்கத் தயார் என்கின்றனர். சில தமிழ்த்தேசியக் கட்சிகள் சமஷ்டிதான் தமிழ் மக்களுக்கான தீர்வு என்கின்றனர். இதுதான் எங்களிடம் உள்ள வேற்றுமை. இதிலிருந்து நாம் விடுபடுகின்றபட்சத்தில்தான் எம் இனத்துக்கான விடுதலை சாத்தியமாகும் - என்றார்.



(ஐ)

# தமிழ் மக்கள் கூட்டணி மட்டுமே தமிழ் மக்களை ஏமாற்றவில்லை

## மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

தமிழ் மக்களை ஏமாற்றாத ஒரே கட்சி தமிழ் மக்கள் கூட்டணி தான் என்று அந்தக் கட்சியின் முதன்மை வேட்பாளர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைகழக மாணவனாக 2010ஆம் ஆண்டில் இருந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்தேன். ஓர் அரசியல் இயக்கமாக செயல்பட்டோம். 2019 ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப் போம் என்றார்கள். புறக்கணித்தால் ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவார்கள் என்று கூறினோம். அதனை அவர்கள் ஏற்கவில்லை. அதிலிருந்து அவர்களுடன் முரண்பாடு நிலவிவந்தது. 2020 பாராளுமன்றத் தேர்தலோடு அவர்களோடு இணைந்து செயல்பட முடியாது என்று நாம் அங்கிருந்து வெளியேறினோம்.

இதுபோன்று, சர்வதேச விசாரணைகள் தேவை என வடக்கு மாகாண சபை முதலமைச்சராக இருந்த சி. வி. விக்னேஸ்வரன் மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றியமையை அடுத்து அவரை தமிழ் அரசு கட்சி வெளியேற்றியது. அந்நிலையிலேயே நாம் இருவரும் ஒன்றிணைய வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டது. நாம் தற்போது தமிழ் மக்கள் கூட்டணியாக பயணிக்கிறோம்

எமது தேர்தல் பிரச்சாரங்களில் நாம் மற்றைய கட்சிகள் மீது சேறு வீசும் தேவை எமக்கு இல்லை. நாங்கள் என்ன செய்தோம் என சொல்லும் அளவுக்கு மக்களுக்கு நாங்கள் சேவை செய்துள்ளோம். அதனை முன்னிறுத்தியே எமது தேர்தல் பிரசாரங்கள் இருக்கும்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியான சூழலை அடுத்து தென்னிலங்கையில் பழைய அரசியல்வாதிகளை தென்னிலங்கை மக்கள் ஓரங்கட்டி விட்டனர். அவர்களும் அரசியலில் இருந்தும் ஒதுங்கிக்கொண்டனர். ஆனால், தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ எதுவும் செய்யாத தமிழ் அரசியல்வாதிகள் இன்றும் தேர்தலில் நிற்கின்றனர். அவர்களை தமிழ் மக்களும் ஓரங்கட்ட வேண்டும். தற்போதைய நிலையில் மக்களை ஏமாற்றாத ஒரு அணியாக தமிழ் மக்கள் கூட்டணியே உள்ளது. நீங்கள் விரும்பும் மாற்றம் எம் ஊடாக கிடைக்கும் என உறுதி அளிக்கிறேன் - என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*13ஆம் திருத்தம், அதிகாரப் பகிர்வு:*

# ராஜபக்ஷக்களின் சித்தாந்தத்தை ஜே. வி. பியினர் கைவிடவேண்டும்!

## ரவூப் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 21

**13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு தொடர்பில் ஜே. வி. பியினர் ராஜபக்ஷக்களின் சித்தாந்தத்தை பின்பற்றுவதை முழுமையாக கைவிட வேண்டும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.**



மேலும், ஜே.வி.பியினர் மார்க்சிச இடதுசாரித்துவக் கொள்கையைக் கொண்டவர்கள். அவர்கள் இரண்டு கிளர்ச்சிகளைச் செய்ததன் பின்னர் மீண்டும் ஜனநாயக வழிக்கு வந்தார்கள். அதன் பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டு போராடினார்கள்.

பின்னர் அவற்றையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு, மாகாண சபைகளுக்கான தேர்தலில் பங்கேற்று உறுப்புரிமைகளையும் பெற்றுக்கொண்டார்கள். இந்தச் செயல்பாடானது அவர்களின் முற்போக்கான வரவேற்கக்கூடிய பிரதிபலிப்பாகும்.

அதுமட்டுமன்றி நிறைவடைந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர், மாகாண சபை முறைமையை அமுலாக்கப் போவதாகவே அறிவித்திருந்தனர். இருப்பினும், தற்போது அவர்கள் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரான நிலைப்பாடுகளையும் அதிகாரப்பகிர்வு அவசியமில்லை என்ற தோற்றப்பாட்டிலும் கருத்துகளை பகிர்ந்துள்ளார்கள்.

உண்மையில், அதிகாரப்பகிர்வு தேவையில்லை, அபிவிருத்திதான் அவசியம் என்பது ராஜபக்ஷக்களின் சித்தாந்தம். அந்த சித்தாந்தம் ஜே.வி.பிக்குள் தற்போது எட்டிப்பார்க்கிறது. தற்போது நாட்டின் அனைத்து மக்களும் ஐக்கிய இலங்கைக்குள் வாழவேண்டும் என்பதை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் அந்தந்த இனங்களுக்குரிய தனித்துவம் பாதுகாக்கப்பட்டு சுயாட்சி அளிக்கப்பட வேண்டும்.

தங்களைத் தாங்களே ஆளுகின்ற வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அதன் மூலமாகத்தான் நாட்டில் உள்ள இனங்களுக்கு இடையிலான நீண்டகால முரண்பாடுகளுக்கு தீர்வை எட்ட முடியும். ஆகவே, ஜே.வி.பி. அதிகாரப்பகிர்வு சம்பந்தமான தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் முதலில் அவர்களின் கொள்கையில் மாற்றம் ஏற்படுவது அவசியமாகும். அதிகாரங்கள் பகிரப்படாமல் உண்மையான மாற்றத்தை அடைவது கடினமான காரியமாகும் - என்றார். (ஐ)

# 113 ஆசனங்களே எங்களின் இலக்கு!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 20

பாராளுமன்ற தேர்தலில் வெற்றியை இலக்கு வைத்தே போட்டியிடுகின்றோம். 113 இற்கு மேற்பட்ட ஆசனங்களை எதிர்பார்க்கின்றோம் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரு தடவைகள் ஆயுதம் ஏந்தியவர்கள்தான் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளனர். எனவே, நாட்டு மக்கள் பொதுத் தேர்தலின்போது ஜனநாயகம் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலிகள் அமைப்பினர் ஆயுதம் ஏந்துவதற்கு முன்னர் ஆயுதம் ஏந்தியவர்கள்தான் ஜே. வி. பியினர். இரு தடவைகள் அவர்கள் கிளர்ச்சி செய்தனர். அதனால்தான் அரசியல்வாதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நேரிட்டது. ஜே. வி. பியினரிடமிருந்து உயிரை பாதுகாத்துக் கொள்ளவே அன்று பொலிஸ் பாதுகாப்பை கோரினோம்.

இன்று எமக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. ஆனால், எதற்காக பொலிஸ் பாதுகாப்பு பெறப்பட்டது என்ற வரலாற்றை மறக்கக்கூடாது. தேர்தலுக்கு பின்னர் நாட்டில் குழப்பம் இருக்கவில்லை. இதனை மதிக்கின்றோம். இப்படியே ஜனநாயக வழியில் ஜே. வி. பி. பயணிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

பாராளுமன்ற தேர்தலில் வெற்றியை இலக்கு வைத்தே போட்டியிடுகின்றோம். 113 இற்கு மேற்பட்ட ஆசனங்களை எதிர்பார்க்கின்றோம். நாட்டின் ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற முறைமையை பாதுகாக்க மக்கள் வாக்களிப்பார்கள் என நம்புகின்றோம். ஆயத் பலம் ஊடாக இரு தடவைகள் ஆட்சியைக் கைப்பற்ற முற்பட்டவர்களிடம்தான் தற்போது ஆட்சி ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, ஜனநாயகம் பற்றியும் மக்கள் சிந்திக்க வேண்டும்-என்றார். (அ)

*ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகள்*

# ஜனாதிபதி அநுர குமாரவுக்கு இன்று வரையே அவகாசமாம்!

கொழும்பு, ஒக். 21

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியிடப்படாமல் இருந்த இரண்டு அறிக்கைகளை வெளியிடுவதற்கு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியுடன் நிறைவடைகிறது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி வெளியிடத் தயங்கும் இரண்டு அறிக்கைகளை வெளியிடுமாறு நான் ஜனாதிபதிக்கு வழங்கியிருந்த நேரம் நாளை (இன்று) முற்பகல் 10 மணியுடன் முடிவடைகிறது.

இந்த அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவதன் மூலம், அரசமைப்பில் அவருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றி, அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்படும் அபாயத்தைத் தவிர்க்கவும் நாளை (இன்று) முற்பகல் 10 மணி வரை அவகாசம் உள்ளது.

எவ்வாறாயினும், ஜனாதிபதி அரசியலமைப்பின் 38 ஆவது சரத்தை மீறி, நாளை (இன்று) காலைக்குள் இந்த அறிக்கையை வழங்கத் தவறினால், நான் நிச்சயமாக அந்த அறிக்கைகளை வெளியிடுவேன் - என்றார். (ஐ)

# புதிய அரசிலும் ஹரிணியே பிரதமர் 25 பேருக்கே அமைச்சரவையில் இடம்

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் அரசாங்கத்தில் தற்போதைய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவே பிரதமராக இருப்பார் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை 25 உறுப்பினர்களுக்கு மட்டுப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.



அடுத்த ஆண்டுக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டம் எதிர்வரும் டிசெம்பரில் முன்மொழியப்படும். முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் அவசியமா என்பதை கண்டறிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு வழங்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்போது வீடுகளில் பணிபுரியும் குழுவாக மாறியுள்ளமை பொலிஸ் அதிகாரிகளையும் அவமதிக்கும் செயலாகும். இவ்வாறு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் - என்றார். (ஐ)

# விஜித ஹேரத் வெளியிட்ட கருத்துகள் பொய்யானவை

## காஞ்சன விஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 20

அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் விஜித ஹேரத் வெளியிட்ட பல கருத்துகள் பொய்யானவை என முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், விஜித ஹேரத் எதிர்க்கட்சியில் இருந்தபோதும், அரசாங்கத்தில் இருந்தபோதும் பொய்யான கருத்துகளை வெளியிட்டு வருகிறார்.

அப்போது எதிர்க்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எண்ணெய் விலையில் இருந்து பணம் பொக்கெற்றுக்கு செல்லும் எனக் கூறியிருந்த நிலையில் தற்போது அந்தப் பணம் தற்போது பொறுப்பான அமைச்சர் அநுரகுமாரவின் பொக்கெற்றுக்கு செல்கிறது என கூறவேண்டும்.

மக்களுக்கு உண்மையை



புரியவைத்தமைக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு நன்றி தெரிவிக்கப்பட வேண்டும். தேசிய மக்கள் சக்தியால் விமர்சிக்கப்பட்டது உண்மையான [illegible] என்றார்.

# பிரசாரத்தில் பங்கேற்க மகிந்த ராஜபக்ஷ முடிவு!

கொழும்பு, ஒக். 21

பாராளுமன்ற தேர்தல் பிரசார பணிகளில் பங்கேற்க மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்திலிருந்து அவர் பிரசாரப் பணிகளில் ஈடுபடுவார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன பெற்ற படுதோல்வியை அடுத்து அந்தக் ட்சியின் தலைவரும் முன்னாள் ஜனதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து தற்காலிகமாக ஒதுங்குகிறார்



என்று கூறப்பட்டது.

இந்த நிலையிலேயே, எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்திலிருந்து பொதுஜன பெரமுனவின் வெற்றிக்காக மகிந்த ராஜபக்ஷ தீவிர பிரசாரத்தில் ஈடுபடுவார் என்று கூறப்படுகின்றது. நாடு முழுவதும் அவர் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுவார் என்றும் கூறப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அம்பாறை மாவட்ட செயலகத்தில் தேர்தல் முறைப்பாட்டு மையம்

## தெரிவத்தாட்சி அலுவலர் சிந்தக தகவல்

காரைதீவு, ஒக். 21

**பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் வன்முறை மற்றும் உரிமை மீறல்கள் குறித்து முறைப் பாடுகளை சுயாதீனமாக தெரிவிக்க அம்பாறை மாவட்ட செயலகத்தில் தேர்தல் முறைப்பாட்டு மையம் ஒன்று ஸ்தாபிக் கப்பட்டுள்ளது- இவ்வாறு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.**


அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் 528 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் 26 ஆயிரமாக இருந்த தபால் மூல வாக்குகள், இம்முறை 30 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

அதேபோன்று அம்பாறை ஹார்ட்டி உயர் தொழில்நுட்ப கல்லூரியில் வாக்கெண்ணும் நிலையங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 56 ஆக இருந்தது. ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் அது 68 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு, மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 21 அரசியல் கட்சிகளினதும் 43 சுயேச்சை



குழுக்களினதும் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 5, 55, 432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்"- என்றார்.



# கல்முனையில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு

கல்முனை, ஒக். 21

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட அல் - அஸ்ஹர் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம். ஏ. அக்பர் அலி தலைமையில் பிரதேச பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரியின் வழிகாட்டலில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமும் சுற்றுப்புறச் சூழலை சுத்தப்படுத்தலும் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் நுளம்பியல் ஆய்வுக் குழுவின் ஆய்வின் படி டெங்கு நுளம்பு அதிகம் பெருகும் அபாயம் காணப்படுகின்ற இடங்களில் இந்த வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் டெங்கு நுளம்புகள் காணப்படக்கூடிய இடங்கள், பொருட்கள் என்பன அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கு ஆரோக்கியமான பாடசாலை சூழல் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையில் கல்முனை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# காரைதீவில் மாதர் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி

காரைதீவு, ஒக். 21

தொழில் முயற்சிகளுக்கு பெண்களை வலுவூட்டல் எனும் தொனிப்பொருளின் கீழ், மாதர் உற்பத்தி செய்த பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் காரைதீவில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் கோ. அருணனின் தலைமையில் சனிக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்.

அங்கு மாதர் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தினர் உற்பத்தி செய்த பொருட்களை காட்சிப்படுத்தி, விற்பனையும் செய்யப்பட்டது .

இதன்போது, காரைதீவு பிரதேச மாதர் சங்கங்களால் முன்னாள் பிரதேச செயலாளரும் தற்போதைய மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான சிவ. ஜெகராஜன் மற்றும் சிறப்பாக பயிற்சிகளை முடித்த மாணவர்கள், ஆசிரியர் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்க தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (எ)

# திரியாய் வளத்தாமலையில் பிக்குவின் காணிகள் அளவீடு

## மூவின மக்களும் கடும் எதிர்ப்பு

திருகோணமலை, ஒக். 21

திருகோணமலை - திரியாய் வளத்தாமலைப் பகுதியில் பிக்குவின் காணிகளை அளவிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மக்களின் உறுதிக் காணிகளை பௌத்த பிக்கு அடாவடித்தனமாக கையகப்படுத்தி விவசாயம் மேற்கொண்டு வருவதாக செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைய குச்சவெளி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரின் தலைமையில் விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வளத்தாமலைப்பகுதியில் உள்ள பௌத்த விகாரைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 ஏக்கர் மற்றும் அரிசிமலை விகாராதிபதியின் தனியார் உறுதிக் காணி எனக்கூறப்படும் 18 ஏக்கர் காணிகளை அளந்து பௌத்த பிக்குவுக்கு கையளித்து ஏனையவற்றை மக்களுடைய விவசாய நடவடிக்கைக்கு வழங்குவதாக எட்டப்பட்ட முடிவுக்கு அமைய குறித்த அளவீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பகுதியில் சப்தநாக பப்பத வன செனசுன நம்பிக்



கைப் பொறுப்பாளர் சபைக்கு 2020. 05. 26ஆம் திகதியில் இருந்து 30 வருடகால குத்தகையின் அடிப்படையில் காணி ஆணையாளர் நாயகத்தின் 04/10/62767 இலக்கம் கொண்டதும், மாகாண காணி ஆணையாளரின் உத்தரவின் அடிப்படையில் 2020.10. 02 வெளியான வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 20. 2342 ஹெக்டேயர் காணி வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணியையும், அப்பகுதியில் அரிசிமலை விகாராதிபதி பானாமூரே திலகவன்ச நாயக்க தேரருக்கு இருப்பதாகக் கூறும் தனியார் உறுதிக்காணி 18 ஏக்கரையும் அளவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் பூஜா பூமி எனும் பெயரில் மக்களுடைய காணிகளை அரிசிமலை விகாராதிபதி பானாமூரே திலகவன்ச நாயக்க தேரர் ஆக்கிரமித்து வருவதாக குற்றஞ்சாட்டினர். அத்துடன் இந்த பிக்கு இனங்களுக்கு இடையே முறுகல் நிலையை தோற்றுவித்து வருவதாகவும் எனவே அவரை இங்கிருந்து அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மூவின மக்களும் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். (எ)

# ரூ. 5,000 போலி நாணயத்தாள்களுடன் அக்கரைப்பற்றில் மூன்று பேர் கைதாகினர்

அக்கரைப்பற்று, ஒக். 21

அக்கரைப்பற்று - பாலமுனை பிரதேசத்தில் 5000 ரூபாய் போலி நாணயத்தாள்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் திடீர் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது, கார் ஒன்றில் இவ்வாறு போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டதோடு, அவருடன் காரில் பயணித்த மேலும் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.


கைதான சந்தேகநபர்கள் 34, 43 மற்றும் 46 வயதுடைய கல்வாஞ்சிக்குடி மற்றும் மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட 3 பேரையும் நாளை 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# திடீரென தீப்பிடித்த ஓட்டோ

திருகோணமலை, ஒக். 21



திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்து முற்றாகச் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் கிண்ணியா பகுதியில் இடம்பெற்றது.

மூதூரில் இருந்து கிண்ணியாவுக்குச் சென்ற ஓட்டோவே இவ்வாறு தீப்பற்றி எரிந்தது.

ஓட்டோ சாரதி, வாகனத்திலிருந்து இறங்கி ஓடி உயிர் தப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் போர் அழிவுக்கு அமெரிக்காதான் காரணம்!

## ரஷ்ய ஜனாதிபதி புடின் சாடல்

**மொஸ்கோ, ஒக். 21**

**"அமைதி வழியையே நாங்கள் விரும்பினோம் ஆனால், உக்ரைன் தான் எங்களுடனான பேச்சுகளை நிறுத்தி விட்டது. உக்ரைன்மீது போர் தொடுக்கவும் அழிவுக்கும் அமெரிக்காதான் காரணம்"- இவ்வாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.**



2022ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் ரஷ்யா - உக்ரைன் இடையே போர் நீடித்துவரும் நிலையில் புடின் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா ஆகிய 5 நாடுகளை உள்ளடக்கிய கூட்டமைப்பு ஹபிரிக்ஸ்" என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கூட்டமைப்பின் மாநாடு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் 2024ஆம் ஆண்டுக்கான பிரிக்ஸ் அமைப்பின் 16ஆவது உச்சி மாநாடு ரஷ்யாவின் தலைமையில் நடைபெறவுள்ளது. ரஷ்யாவில் உள்ள காசான் பகுதியில் நாளை 22ஆம் திகதியும் நாளை மறுதினம் 23ஆம் திகதியும் பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெறுகிறது.

இதனையொட்டி நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் புடின் மேலும் கூறுகையில், "உக்ரைனுடனான பிரச்னையை அமைதி வழியில் தீர்க்கவே நாங்கள் விரும்பினோம். ஆனால், உக்ரைன் தான் அமைதிப் பேச்சுவார்த்தையை துண்டித்துக் கொண்டது. இந்தப் பிரச்னை வலுக்க அமெரிக்கா தான் காரணம். உலக நாடுகள் பலவும், ஏன் அமெரிக்காவின் பாரம்பரிய கூட்டாளிகள் கூட இப்போதெல்லாம் அமெரிக்க டொலரை வைத்து பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் இருந்து பின்வாங்குகின்றனர். சீனா மிகப்பெரிய பொருளாதாரமாக வளர்ந்து வருகிறது. சீனாவின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது. ரஷ்யாவும் - சீனாவும் ஒரு தனித்துவ உறவைப் பேணுகிறது. எங்களது உறவு சர்வதேச ஸ்திரத் தன்மையை நிர்ணயிக்கிறது"- என்றார். (எ)

# இஸ்ரேலுக்கு எதிரான எங்கள் யுத்தம் ஓயாது

## பலஸ்தீன மக்கள் உறுதி


காஸா, ஒக். 21

ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வர் கொல்லப்பட்ட போதிலும் இஸ்ரேலுக்கு எதிரான எங்கள் யுத்தம் தொடரும் என்று பலஸ்தீன மக்கள் உறுதிபட தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தால் சிதையுண்டு போயுள்ள கான் யூனிசில் உள்ள பலஸ்தீனியர்கள், யஹ்யா சின்வர் கொல்லப்பட்ட போதிலும் யுத்தம் தொடரும் என உறுதியாக கூறினர் என்று பி. பி. சி. செய்தி வெளியிட்டுள்ளது.

பி. பி. சி. சுயாதீன செய்தியாளர்களை பயன்படுத்தி பலஸ்தீனியர்களின் கருத்தைப் பெற்றுள்ளது.

"இந்த யுத்தம் யஹ்யா சின்வரையோ அல்லது வேறு எவரையுமோ நம்பியிருக்கவில்லை. எந்தவொரு தலைவர்மீதோ அல்லது அதிகாரி மீதோ நம்பிக்கை வைத்து இந்த யுத்தத்தை பலஸ்தீனிய மக்கள் முன்னெடுக்கவில்லை" என்று மருத்துவர் ரமடான் பாரிஸ் என்பவர் கூறினார்.



"இது பலஸ்தீன மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அழிப்பு போர், பிரச்னை என்பது யஹ்யா சின்வரை விட மிகப்பெரியது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இஸ்ரேல் எங்களை மாத்திரம் அழிக்க விரும்பவில்லை. முழு மத்திய கிழக்கையும் அழிக்க விரும்புகின்றது. இஸ்ரேல் இராணுவத்தினர் லெபனானில் சிரியாவில் ஏமனில் போரிடுகின்றனர் என்று அட்னன் அசூர் என்பவர் கூறினார். இவ்வாறு பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ)

# இஸ்ரேல் பிரதமர் இல்லத்தை குறிவைத்து ட்ரோன் தாக்குதல்

டெல்அவிவ், ஒக். 21

லெபனானில் இருந்து இஸ்ரேலின் சிசேரியா நகரை நோக்கி ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இல்லத்தை இலக்கு வைத்து இந்த ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ட்ரோன் ஒன்று சிசேரியாவில் உள்ள கட்டடம் ஒன்றை சேதப்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்று இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது. அத்தோடு, சிசேரியாவில் உள்ள நெதன்யாகுவின் வீட்டை நோக்கி ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதை பிரதமரின் செய்தித் தொடர்பாளர், உறுதி செய்தார் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், இந்தத் தாக்குதலின் போது நெதன்யாகு வீட்டில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதனிடையே மேலும் இரண்டு ஆளில்லா விமானங்கள் இடைமறிக்கப்பட்டதாகவும், வடக்கு டெல் அவிவில் உள்ள கிலிலோட்டில் எச்சரிக்கை சைரன்கள் ஒலிக்கப்பட்டன என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. (எ)

# ஹமாஸ் தலைவர் யஹ்யாவின் கடைசி நிமிட காட்சி வெளியீடு

காஸா, ஒக். 21

ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வர் தங்கியிருந்த கட்டடம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது எடுத்த ட்ரோன் வீடியோவை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டது. அதில் மரக் கட்டை ஒன்றை எடுத்து ட்ரோன் மீது யஹ்யா சின்வர் வீசி எறியும் காட்சி பதிவாகியுள்ளது.

ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஈரானில் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் கொல்லப்பட்டார். ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதிகள் கொல்லப்பட்ட நிலையில், இஸ்ரேல் மக்கள் மீது 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி நடத்திய தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்ட ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வர் மட்டும் இஸ்ரேல் இராணுவத்திடமிருந்து தொடர்ந்து தப்பி வந்தார். மக்களோடு மக்களாக அவர் கலந்திருந்ததால், அவர் பிடிபடவில்லை. அவரை உயிரோடு அல்லது சடலமாக மீட்கும் வரை ஓயமாட்டோம் என்று இஸ்ரேல் இராணுவம் சபதம் செய்திருந்தது.





இந்த நிலையில் தெற்கு காஸாவின் ரபா பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தினர் கடந்த புதன்கிழமை வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது ஒரு கட்டடம் அருகே சென்றபோது, அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இதையடுத்து அந்த கட்டடத்தை இஸ்ரேல் இராணுவம் குண்டு வீசி தகர்த்தது. இதன் பின் அந்த கட்டடத்துக்குள் யாரும் இருக்கிறார்களா? என்பதை அறிய ட்ரோன் பறக்கவிடப்பட்டது. அப்போது, கட்டடத்தின் இடிபாடுகளுக்கு இடையே ஷோபா ஒன்றில் வயதான நபர் தனது முகத்தை மறைத்தபடி அமர்ந்திருந்தார். அவர் அருகே ட்ரோன் பறந்து சென்றபோது, அவர் ஒரு மரக் கட்டையை எடுத்து ட்ரோன் மீது வீசும் காட்சி பதிவாகியது.

இதையடுத்து அந்த கட்டடத்தின் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அந்த நபர் பலியானார். அவர் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வர் என்பது பயோமெட்ரிக் ஆவணங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டன. ட்ரோன் மீது யஹ்யா சின்வர் மரக்கட்டையை தூக்கி வீசும் வீடியோவை சமூக ஊடகத்தில் இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது. (எ)

# இந்தியா-பாகிஸ்தான் உறவில் புதிய அத்தியாயம் தொடக்கம்

## முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்

இஸ்லாமாபாத், ஒக். 21

இந்தியா, பாகிஸ்தான் உறவில் புதிய அத்தியாயம் ஆரம்பித்துள்ளது என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்தில் கடந்த 15, 16 ஆகிய திகதிகளில் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்றார்.

இது தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பின் மூத்த சகோதரனும் முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப், இந்திய செய்தியாளர்களுக்கு இஸ்லாமாபாத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.



"ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார். அவரது வருகை நல்ல தொடக்கமாகும். இங்கிருந்தே இரு நாடுகளும் முன்னேறி செல்ல வேண்டும். இந்தியா, பாகிஸ்தான் இடையே புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது"- என்றார். (எ)

# சீக்கிய பிரிவினைவாதியை கொலை செய்ய முயற்சி

## இந்திய புலனாய்வு பிரிவுமீது அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஒக். 21

அமெரிக்காவில் காலிஸ்தான் பிரிவினைவாத இயக்கத்தின் செயல்பாடுகளை முன்னெடுத்த சீக்கியர் ஒருவரை கொலை செய்ய முயற்சித்தார் என இந்தியாவின் முன்னாள் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தருக்கு எதிராக அமெரிக்கா குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது.

நியூயோர்க்கின் தென் மாவட்டத்துக்கான அமெரிக்க சட்டத்தரணிகள் அலுவலகம், குர்பத் வந்த சிங்கினை கொல்ல முயன்றார் என விகாஸ் யாதவ் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது. ஒப்பந்த கொலை செய்தல் மற்றும் சட்டவிரோத பணப் பரிமாற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

விகாஸ்யாதவுக்கு எதிராக முதல் முறையாக சுமத்தப்பட்டுள்ள இந்த குற்றச்சாட்டு சீக்கிய பிரிவினைவாதியை கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டுகளுடன் இந்திய அரசாங்கத்தை நேரடியாக தொடர்புபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி

## சொந்த மண்ணில் சொதப்பிய இந்தியா


பெங்களூரு, ஒக். 21

இந்தியா - நியூசிலாந்து இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா வந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி, முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூாருவில் உள்ள சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 46 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து 402 ஓட்டங்கள் குவித்தது. நியூசிலாந்து தரப்பில் ரச்சின் ரவீந்திரா 134 ஓட்டங்களும், டெவான் கான்வே 91 ஓட்டங்களும், ரிம் சவுதி 65 ஓட்டங்களும் எடுத்தனர். இதையடுத்து 366 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா 462 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இதில் அபாரமாக துடுப்பெடுத்தாடிய சர்ப்ராஸ் கான் 150 ஓட்டங்களிலும், ரிஷப் பண்ட் 99 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இந்த நிலையில், 107 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. ஜஸ்ப்ரீத் பும்ரா 4 பந்துகள் வீசிய நிலையில், போதிய வெளிச்சமின்மை காரணமாக நேற்று முன்தினம் 4ஆம் நாள் ஆட்டம் முடிக்கப்பட்டது.

5ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. மழை காரணமாக ஆட்டம் தாமதமாக தொடங்கியது. தொடக்கத்தில் ரொம் லேதம் ஓட்டம் எதுவும் எடுக்காமல் பும்ரா வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். பின்னர் டெவான் கான்வே 17 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து வில் ய்ங், ரச்சின் ரவீந்திரா இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர். இதனால் நியூசிலாந்து அணி 27. 3 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 107 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.



இந்த வெற்றியால் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என நியூசிலாந்து அணி முன்னிலை பெற்றது. 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(எ)

# முன்னேறியது நியூசிலாந்து அணி முதலிடத்தில் நீடிக்கிறது இந்தியா

டுபாய், ஒக். 21

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி நாலாவது இடத்துக்கு முன்னேறியது.

நியூசிலாந்து - இந்தியா இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. இந்த தொடர் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடராகும்.

இந்த நிலையில், இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்ற பின் புதிய உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) நேற்று பிற்பகல் வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் நியூசிலாந்துக்கு எதிராக தோல்வி கண்ட இந்திய அணி (68.06 சதவீதம்) முதல் இடத்தில் நீடிக்கிறது. அவுஸ்திரேலியா (62.50 சதவீதம்) 2ஆம் இடத்திலும், இலங்கை (55.56 சதவீதம்) 3ஆம் இடத்திலும் நீடிக்கின்றன.

இந்தியாவுக்கு எதிராக வெற்றி பெற்ற நியூசிலாந்து (44. 44 சதவீதம்) 6ஆவது இடத்தில் இருந்து 4ஆவது இடத்துக்கு முன்னேறியது. இங்கிலாந்து (43.06 சதவீதம்) 5ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா (38.89 சதவீதம்) 6ஆவது இடத்திலும் 7 ஆவது முதல் 9 இடங்களில் முறையே பங்களாதேஷ் (34.38 சதவீதம்), பாகிஸ்தான் (25.93 சதவீதம்), மேற்கு இந்திய தீவுகள் (18.52 சதவீதம்) அணிகள் உள்ளன.

(எ)




# “46 ஓட்டங்களுக்கு ஓர் இன்னிங்ஸை இழப்போமென எதிர்பார்க்கவில்லை”

பெங்களூரு, ஒக். 21

“46 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுப்போம் என்று எதிர்பார்க்கவில்லை”- இவ்வாறு இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்தார்.

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தோல்வியின் பின்னர் ரோஹித் சர்மா கூறுகையில்,

“முதல் இன்னிங்ஸில் நாங்கள் சரியாக துடுப்பெடுத்தாடவில்லை. நாங்கள் 46 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் பறிகொடுப்போம் என்று எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்பட்டோம். இது ஒரு நல்ல முயற்சி. 350 ஓட்டங்கள் பின்தங்கியிருக்கும் போது, அதிகம் யோசிக்க முடியாது. ரிஷப் பண்ட் மற்றும் சர்ப்ராஸ் கான் ஆகியோரின் துடுப்பாட்டத்தை பார்க்க மிகவும் உற்சாகமாக இருந்தது.



நியூசிலாந்து அணி நன்றாக பந்துவீசியது, அதற்கு நாங்கள் பதிலளிக்கத் தவறிவிட்டோம். நாங்கள் மீண்டு வருவோம்”- என்றார்.

(எ)

# இலங்கை தொடர்ச்சியாக வெற்றி பெறுவது அவசியம்

## சரித் அசலங்க தெரிவிப்பு

கண்டி, ஒக். 21

தர வரிசையில் முன்னேறுவதற்கு தொடர்ச்சியாக வெற்றி பெறுவது அவசியம் என்று இலங்கை அணியின் தலைவர் சரித் அசலங்க தெரிவித்தார்.

இலங்கைக்கும் மேற்கு இந்திய தீவுகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் கண்டி பல்லேகலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

இந்த நிலையில், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் அணிகளுக்கான ஐ. சி. சி. தரவரிசைப்படுத்தலில் இலங்கை 7ஆம் இடத்திலும் மேற்கு இந்திய தீவுகள் 10ஆம் இடத்திலும் உள்ளன. கடந்த இரண்டு வருடங்களாக சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இரண்டு அணிகளும் பிரகாசிக்கத் தவறியதால் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் தகுதியைப் பெற முடியாமல் போனது.

இந்தியாவுடனான ஒருநாள் தொடரைக் கைப்பற்றிய போதிலும் தொடர்ச்சியாக இலங்கை அணி வெற்றிகளை பெறுவது அவசியம் என சரித் அசலங்க தெரிவித்தார்.

இந்தியாவுடனான ஒருநாள் தொடர் வெற்றியும் மேற்கு இந்திய தீவுகளுடனான ரி - 20 தொடர் வெற்றியும் அணிக்கு பெரும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அணியின் ஆற்றல்களை உயரிய நிலைக்கு கொண்டு சென்று அணியை தரவரிசையில் 3ஆம் இடத்துக்கு தரமுயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படுவதாகவும் கூறினார்.

(எ)



ஆசிய வலைபந்தாட்ட சம்பியன்ஷிப்

# 100 கோல்களைக் கடந்து இலங்கை அமோக வெற்றி

பெங்களூரு, ஒக். 21

ஆசிய வலைபந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை மகளிர் அணி அமோக வெற்றி பெற்றது.

இந்தியாவின் பெங்களூாரு, கோரமங்கலம் உள்ளக விளையாட்டரங்கில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற சவூதி அரேபியாவுக்கு எதிரான ஏ குழு போட்டியில் இலங்கை 118 - 5 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆரம்பம் முதல் கடைசி வரை மிகுந்த வேகத்துடனும் விவேகத்துடனும் விளையாடிய இலங்கை அணி முதலாவது கால் மணி நேர ஆட்டப் பகுதியை 27 - 2 என்ற கோல்கள் கணக்கில் தனதாக்கியது.

தொடர்ந்து இரண்டாவது கால் மணி நேர ஆட்டப் பகுதியில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அப் பகுதியை 32 - 0 என தனதாக்கியது.

இதற்கமைய இடைவேளையின்போது இலங்கை 59 - 2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தது.

இடைவேளைக்குப் பின்னர் மூன்றாவது கால் மணி நேர ஆட்டப் பகுதியையும் இலங்கை 32 - 1 என தனதாக்கிக்கொண்டது.

இந்த நிலையில் 76 கோல்களை மொத்தமாக போட்டிருந்த திசலா அல்கமவுக்கு 4ஆவது கால் மணி நேர ஆட்டப் பகுதியில் ஓய்வு வழங்கப்பட்டது.

எனினும் ஹசித்தா மெண்டிஸ் 13 கோல்களையும் ரஷ்மி பெரேரா 14 கோல்களையும் போட அப் பகுதியை 27 - 2 என்ற கோல்கள் தனதாக்கி ஒட்டுமொத்தமாக 118 - 5 என்ற கோல்கள் வித்தியாசத்தில் இலங்கை மிக இலகுவாக வெற்றிபெற்றது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைகேடாக...

வருகின்றது. வெளிநாட்டில் அல்லது உள்நாட்டில் பண மோசடி மற்றும் பிற சொத்துகளில் இருந்து பெறப்பட்ட முறைகேடான ஆதாயங்கள் அல்லது பணத்தை கண்டறிந்து, அதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கறுப்பு பணத்தை பதுக்கி வைத்திருப்பவர்கள் தொடர்பில் அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் அரசாங்கம் ஏற்கனவே இரகசிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-சி)

## ரணில்...

வாகனங்கள், 16 சமையல்காரர்கள் உட்பட பல சலுகைகளை கோரியிருந் தார். தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மூன்று வாகனங் களே வழங்கப்படும்.

அரச நிதியை முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்துவதை தடுப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்படும். ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வீடுகளில் இரண்டு அம்புலன்ஸ்கள் எந்நேரமும் தயாரான நிலையில் உள்ளன இவற்றை தனிப்பட்ட சொத்தாகப் பயன்படுத்தக்கூடாது - என்றும் அவர் கூறினார்.

மாத்தறையில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவல்களை தெரிவித்தார். (ஐ)

## இலங்கைக்கு...

எனும் நூலில் இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் அந்த நூலில், 37 வருடங்களுக்கு முன்னர் 1987ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையை இலங்கைக்கு அனுப்பியது இந்திய அரசாங்கத்தின் தவறாகும்.

தொடக்கம் முதலே இந்தியாவுக்கு இலங்கை சவாலாக இருந்தது. நாட்டில் நிலவும் இனப்பிரச்னை குறித்து அக்கறை கொண்டு, இந்தியாவால் உத்தரவாதமான தீர்வைக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை ஆரம்பத்திலேயே தவறாகி விட்டன. ஆனால், இது சாதாரணமான நடவடிக்கையல்ல.

இலங்கையில் அமைதி காக்கும் பணிக்காக இந்தியா கடுமையாக உழைத்த போதிலும் அது குறைவான கவனத்தையே பெற்றது என்று வெளிவிவகாரத் துறையில் புகழ்பெற்ற அறிஞரான ஜெய்சங்கர் கூறினார் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ-சி)

## சுவசெரிய...

வழங்க டாடா குழுமத்தின் புதிய தலைவர் நடராஜா சந்திரசேகரன் சுவசெரிய நிறுவுநர் ஹர்ஷ டி சில்வாவிடம் கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.

சுவசெரிய சேவையில் தற்போது 297 அம்புலன்ஸ்கள் உள்ளன. இவற்றின் மூலம் ஒருநாளில் 1050 நோயாளிகளுக்கு சேவை வழங்க முடியும். சுவசெரிய மூலமாக நாளொன்றுக்கு 50 மனித உயிர்களை காப்பாற்ற முடிகிறது என்று ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

சுவசெரிய சேவைக்கு டாடா நிறுவனம் ஆரம்பத்தில் 2.3 கோடி டொலர்களை வழங்கியது. இந்த சேவையை நடத்துவதற்காக அரசாங்கம் 400 கோடி ரூபாயை செலவிடுகிறது. சுவசெரிய சேவையை தொழில்நுட்பத்துடன் உலகின் மிகவேகமான அம்புலன்ஸ் சேவையாக அறிமுகப்படுத்த முடியும் என்று உலக வங்கி அதிகாரிகள் பாராட்டியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-சி)

## ஜனநாயக...

கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ஐ)

## யாழ்.கொழும்பு...

புனரமைப்பு பணிகள் செப்ரெம்பரிலேயே நிறைவடைந்துவிட்ட நிலையில் சமிக்ஞை அமைப்பு முறையில் ஏற்பட்ட குழப்பங்களால் ரயில் சேவையை ஆரம்பிக்கும் பணி தொடர்ந்து தாமதமாகி வந்தது.

ரயில் சேவையை மீண்டும் ஆரம்பமாவதாக முன்னரும் பல தடவைகள் அறிவிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சனநாயக...

கே. வி. தவராசா, ஏனைய வேட்பாளர்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், புவனேஸ்வரன் வசந், விமலேஷ் வரிசிறிகாந்தரூபன், குணாளன் கருணாகரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## சங்கு...

கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற மக்கள் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு நிச்சயமாக வாக்களிக்க வேண்டும்.

சங்கு சின்னம் என்பது எனக்கு எழுதித் தரப்பட்ட சின்னமல்ல. அது ஒரு சுயேச்சையின் சின்னமாகும். இலங்கை அரசியல் யாப்பில் தேர்தல் சட்டத்தின்படி, சுயேச்சை குழுவில் யாரும் போட்டியிடலாம். அதில் நூற்றுக்கு மேற்பட்ட சின்னங்கள் வெளியிடுவார்கள். அதில் வருகின்ற ஒரு சின்னத்தை குறிப்பிட்ட குழுவுக்கு வழங்குவார்கள். இது வழக்கம்.

அந்த அடிப்படையில் நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது நான் விரும்பிய சங்கு சின்னத்தை பெற்றுக்கொண்டேன். அப்போது 30 நாட்களுக்கு மாத்திரம்தான் சங்கு சின்னத்தை நான் பாவிப்பதற்கு தேர்தல் ஆணையம் எனக்கு அனுமதி வழங்கியிருந்தது. அந்த சின்னத்தை பயன்படுத்தி பரிபூரணமாக தமிழ் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் 83 சிவில் அமைப்புகளும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து என்னை களமிறக்கியதனால் நான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டேன்.

நான் அந்த ஏழு கட்சிகளிலோ, 83 சிவில் அமைப்புகளிலோ அங்கத்துவம் வகிக்கவில்லை. நான் இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். இன்றும் இலங்கை தமிழ் அரசு கட்சியிலேதான் இருந்து கொண்டிருக்கிறேன். எனவே, சங்கு சின்னத்தை ஜனாதிபதித் தேர்தலுக்காக பாவித்தது உண்மை.

பின்னர் அந்த சின்னத்தை யார் எடுக்கிறார்கள், எவ்வாறு எடுப்பது என்பது தொடர்பில் தேர்தல் சட்டதிட்டங்கள் உள்ளன. சுயேச்சைக் குழுவாக யார் தேர்தல்களில் போட்டியிட்டாலும் அல்லது அரசியல் கட்சிகள் போட்டியிட்டாலும் சின்னங்களை கோருவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.

ஒரு கட்சி கோருமாக இருந்தால் அவர்களுக்கு அவர்கள் கேட்கின்ற சின்னத்தை வழங்குவார்கள். இரண்டுக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒரு சின்னத்தை கோருவார்களாக இருந்தால் திருவுளச்சீட்டு மூலம் அந்த சின்னத்தை தேர்தல் ஆணையம் வழங்கும்.

ஆகவே, சங்கு சின்னத்தை இப்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என கின்ற அமைப்பு பெற்றுள்ளது. அதற்கும் எனக்கும் எந்த சம்பந்த முமில்லை - என்றார். (ஐ)

# அரசாங்கம் வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்காதது பெரும் பிரச்னை!

## சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 21



அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காமல் இருப்பது பெரும் பிரச்னையாகும். ஏனெனில், அடுத்த வருடத்துக்கான வருமான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே செலவுகளை திட்டமிட முடியும். இடைக்கால கணக்கு வாக்கெடுப்பை அனுமதித்துக் கொள்வதன் மூலம் அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியாது. வருமான வழிகளையும் திட்டமிட முடியாது - என்று புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நேற்று கட்சி பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி 19 மாவட்டங்களில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவதுடன் 3 மாவட்டங்களில் எமது பங்காளி கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடுகிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 23 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 55 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அடுத்தபடியாக சஜித் பிரேமதாஸவுக்கு 44 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. ஆனால், யாருக்கும் 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகள் கிடைக்கவில்லை. அதனால், 57 வீத வாக்குகள் தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராகவே அளிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சிகளுக்கு கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் மூலம் எந்தக் கட்சிக்கும் பாராளுமன்றத்தில் 113 ஆசனங்கள் கிடைப்பதில்லை. அதேநேரம் ஜனாதிபதி தேர்தலில் கிடைக்கப்பெற்றது போன்று பாராளுமன்ற தேர்தலில் அந்த வாக்குகள் அவ்வாறே கிடைக்கும் எனவும் தெரிவிக்க முடியாது.

கட்சிகளின் அடிப்படையில் வாக்குகள் பிரிந்து செல்லும். அதனால் தேசிய மக்கள் சக்தியால் நிறைவேற்று அதிகாரத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு நாட்டை ஆட்சி செய்ய முடியாது. பாராளுமன்ற அதிகாரமும் தேவையாகும். பாராளுமன்ற அதிகாரத்தை எவ்வாறான முறையில் மக்கள் வழங்குவார்கள் என்பது அவர்களின் நடவடிக்கைகளிலயே தங்கி இருக்கிறது.

தேர்தல் பிரசார மேடைகளில் அவர்கள் தெரிவித்த விடயங்களுக்கு மாற்றமான நடவடிக்கையே தற்போது இடம்பெறுகிறது. குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு, அரச ஊழியர்களின் சம்பள உயர்வு, பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற விடயங்கள் அவர்கள் தெரிவித்துவந்த வாக்குறுதிக்கு மாற்றமாகவே இருக்கின்றன.

இதேபோன்று இந்த அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காமல் இடைக்கால கணக்கு வாக்கெடுப்பொன்றை அனுமதித்துக் கொள்ளப் போவதாகத் தெரிவித்திருக்கிறது.

பாராளுமன்ற தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி நடைபெற்று 21ஆம் திகதி பாராளுமன்றத்தை கூட்டுவதாகத் தெரிவித்துள்ள நிலையில், டிசெம்பர் முதல் வாரத்துக்குள் அமைச்சரவையை அமைத்து, வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு காலம் போதுமானதாகும்.

இடைக்கால கணக்கு வாக்கெடுப்பை அனுமதித்துக்கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவுகளுக்கு மாத்திரமே நிதி ஒதுக்க முடியும். அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியாது. வரி செலுத்துபவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

அதனால், அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காமல் இருப்பது பெரும் பிரச்னைக்கு வழிவகுக்கும். அடுத்த வருடத்துக்கான வருமான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே செலவுகள் திட்டமிட முடியும். அதே போன்ற, சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளுக்கமைய எமது மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த விடயங்கள் அனைத்தையும் வரவு - செலவு திட்டத்தின் மூலமே திட்டமிட முடியும் - என்றார். (ஐ)

# வான் விபத்தில் எண்மர் காயம்!

கொழும்பு, ஒக். 21

வான் ஒன்று வீதியிலிருந்து விலகி அணைக்கட்டுடன் மோதிய விபத்தில் 8 பேர் படுகாயமடைந்தனர்.

பதுளை - மடுல்சீமையில் நடந்த இந்த விபத்தில், திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்றுவிட்டு நுவரெலியா நோக்கி சென்றுவிட்டு வீடு திரும்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்கு உள்ளான வானில் 12 பேர் பயணித்த நிலையில் 8 பேர் படுகாயமடைந்தனர். ஏனைய நால்வரும் தெய்வாதீனமாக எந்த காயமுமின்றி தப்பினர்.

காயமடைந்தவர்கள் பதுளை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## ஐ.எம்.எவ்...

இடத்திலோ அறிவிப்பார்கள், புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறான கருத்தை வெளியிடுகின்றமையை நான் காணவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு - மலர் வீதியில் அமைந்துள்ள முன்னணியின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை தொடர்பில் எமக்கு தெளிவு இல்லை. பொதுவாக, புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டவுடன், அந்த ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றி தனது அரசாங்கத்தின் கொள்கையை மக்களுக்கு தெரிவிப்பார். இல்லாவிட்டால் பாராளுமன்றத்தில் உரையாற்றி கொள்கை அறிக்கையை வெளியிடுவார்கள்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால், அந்த வாய்ப்பு இம்முறை வரவில்லை. அத்துடன், பாராளுமன்றத்துக்கு வெளியில் மக்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை வெளியிடுவதை நாம் காணவில்லை - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஆசிய தேர்தல் கண்காணிப்பு குழு வெள்ளியன்று இலங்கை வருகிறது!

கொழும்பு, ஒக். 21

**எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் முதலாவது குழு எதிர்வரும் 25ஆம் திகதி - வெள்ளிக்கிழமை நாட்டுக்கு வரவுள்ளது.**

அந்த அமைப்பை சேர்ந்த 30 கண்காணிப்பாளர்கள் பொதுத் தேர்தலை கண்காணிக்க வருவார்கள் என்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்காக வருகை தந்த ஐரோப்பிய ஒன்றியம், பொது நலவாய நாடுகளின் தேர்தல் கண் காணிப்பு குழுக்கள் தொடர்ந்தும் நாட்டிலேயே தங்கியுள்ளன.

பொதுத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக அவர்களுடன் மேல திகமாக ஒரு குழுவும் இணைந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுவதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

## நாடு முழுவதும் யானைவேலி 80 சதவீதப் பணிகள் நிறைவு!

கொழும்பு, ஒக். 21

நாடளாவிய ரீதியில் வனப்பாதுகாப்பு எல்லைகளை வரையறுத்து யானை வேலிகளை அமைக்கும் நடவடிக் கைகள் 80 சதவீதமளவில் நிறைவடைந்துள்ளன என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை 5 ஆயிரத்து 500 கிலோமீற்றர் உள்ளடங்கும் வகையில் யானை வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றும் அந்தத் திணைக்களம் கூறியுள்ளது.

மேலும், 1,500 கிலோமீற்றர் நீளமான யானை வேலியை அமைக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன. யானை வேலி அமைக்கும் பணிகள் நிறைவடைந்தவுடன் அவற்றை பராமரிப்பதற்காக சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் ஈடுபடுத் தப்படவுள்ளனர்.

அத்துடன், சட்டவிரோதமான முறையில் யானை வேலிகளை அமைத்துள்ளவர்களை இணங்கண்டு அவர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள் ளது என்றும் வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித் துள்ளது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை முற்கூட்டியே கூறிய உளவு அமைப்பு

கொழும்பு, ஒக். 21

உலகின் புகழ்பெற்ற உளவு நிறுவனம் ஒன்று ஜனாதிபதித் தேர்தல் முடிவை முற்கூட்டியே அறிந்து தெரிவித்திருந்தமை தற்போது வெளியாகியுள்ளது.

அந்த உளவு அமைப்பு நாட்டின் உயர்மட்ட தூதுவர் ஒருவருக்கே தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் முடிவை மிகச் சரியாகத் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

அந்தத் தூதுவர் அரசியல் கட்சி ஒன்றின் தலைவரிடம் இந்தத் தேர்தல் முடிவை முதலில் தெரியப்படுத்தியுள்ளார். இத்தனை வாக்குகள் கிடைக்கும் என்ற துல்லியமான தகவலையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த புலனாய்வு அமைப்பின் தகவல்படி அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெறுவார். சஜித் பிரேமதாஸ இரண்டாவதாக வருவார் என்றும் கூறியிருந்ததாம். (ஐ)

## நகர்களில் வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 21

நகரங்களிலுள்ள அனைத்து வீடுகளிலும் வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடும்பமொன்றுக்கு நாளாந்தம் தேவையான மரக் கறிகளை வீட்டுத்தோட்டங்கள் மூலம் உற்பத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித் துள்ளது.

இதன் முதல் கட்டமாக பிரதான நகரங்களை அடிப் படையாகக் கொண்டு 10 ஆயிரம் வீடுகளில் வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

## வெவ்வேறு விபத்துகளில் நாடு முழுவதும் 4 பேர் பலி!

கொழும்பு, ஒக். 21

நேற்று முன்தினம் நாடு முழுவதும் வெவ்வேறு விபத் துகளில் பெண் ஒருவர் உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

மொறொந்துடுவ - ஹொரண வீதியில் மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள் ளானதில் 21 வயது இளைஞன் உயிரிழந்தார். பலத்த காயங்களுக்கு உள்ளான அவர், கொனடுவ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

பொரகந்தவில், இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் 81 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, கண்டி - கொழும்பு பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதியதில் கடவத் தையைச் சேர்ந்த 74 வயது நபர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - கோப்பாயில் இடம்பெற்ற விபத் தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 4இல்)

## அரச குடியிருப்பில் தீ விபத்து!

கொழும்பு, ஒக். 21

கொழும்பு - கறுவா தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள அரச குடியிருப்பில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக கறுவா தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த விபத்து இடம் பெற்றது. 119 நிலையத்திலிருந்து கறுவா தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலின் அடிப் படையில் உடனடியாக செயல்பட்ட பொலிஸ் உத்தி யோகத்தர்கள் மற்றும் தீயணைப்பு திணைக்கள அதி காரிகள் தீயை அணைத்தனர் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

தீயால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என் றும் சொத்து சேதம் இன்னும் மதிப்பிடப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப் படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கட்டுநாயக்கா விமான நிலையத்தின் எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 21

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை பிரதி நிதித்துவப்படுத்துவதாக கூறப்படும் உத்தியோகபூர்வ மற்ற பேஸ்புக் பக்கம் குறித்து விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த பேஸ்புக் பக்கம், உரிமை கோரப்படாத பயணப் பொதிகள் விற்பனைக்கு உள்ளன என்றும் மேலும் பல தவறான தகவல்களையும் பரப்பி வருகிறது.

குறித்த பேஸ்புக் பக்கத்தில் உள்ள ஓர் இடுகையில் பல்வேறு பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகர ணங்கள் நிரப்பப்பட்ட ஒரு பயணப்பொதி வெறும் 639 ரூபாய்க்கு விற்பனைக்கு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக பயணப் பொதிகள் விற்பனை செய்யப்பட மாட்டாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவும், இந்த மோச டிகளில் சிக்காமல் இருக்கவும் விமான நிலைய அதி காரிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர். (ஐ)

## லொஹான் ரத்வத்தவின் செயலர் சூட்டு காயத்துடன் சடலமாக மீட்பு

கண்டி, ஒக். 21

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் பிரத்தியேக செயலாளராக கடமையாற்றிய ஒருவர் கட்டுகஸ்தோட்டையில் ரத்வத்தவுக்கு சொந்த மான பணிமனையின் அருகிலுள்ள வீடொன்றில் துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் மீட்கப்பட்டார்.

கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், அவர் நேற்று உயிரிழந்தார்.

இவர் சுடப்பட்டாரா? அல்லது தற்கொலை செய்து கொண்டாரா? என்பது பற்றி விசாரணைகள் நடை பெற்று வருகின்றன. (ஐ)

## சுன்னாகம் வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக். 21

சுன்னாகத்தில் நடந்த வாள்வெட்டில் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

சுன்னாகம் சந்தைப் பகு தியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட பிரச்னையே வாள்வெட்டுக்கு காரணம் என்று கூறப்படுகிறது. வாள் வெட்டுக்கு இலக்கானவர் தெல்லிப்பழை ஆதார மருத் துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

இது தொடர்பில் சுன் னாகம் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## ரெலிக்கொம் தலைவர் பதவியிலிருந்து விலகல்

கொழும்பு, ஒக். 21



சிறீ லங்கா ரெலிக்கொம் பி. எல். சியின் தலைவர் ஏ. கே. டி. டி. அரந்தர அந்தப் பதவி யிலிருந்து இராஜி நாமா செய் துள்ளார்.

இது தொடர்பான இராஜி நாமா கடிதம் சிறீலங்கா ரெலிக் கொம் பி. எல்.சியின் பணிப் பாளர் சபைக்கு கடந்த 18ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சிறீ லங்கா ரெலிக்கொம் பி. எல். சியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் உள்ள ஏ. கே. டி. டி. அரந்தவின் கடந்த 16ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டது. (ஐ)

## ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது!

கொழும்பு, மாளிகாவத்தையில் வீடொன்றை சோத னையிட்டதில் ஹெரோயினுடன் பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு, ஒக். 21

மாளிகாவத்தை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதான இந்தப் பெண் கொழும்பு 10ஐ வசிப்பிட மாக கொண்டவராவார்.

இவரிடமிருந்து 6 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மாளிகாவத்தை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## அரச உல்லாச விடுதியில் 31 இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஒக். 21

நுவரெலியாவில் உள்ள அரச உல்லாச விடுதியில் பல்வேறு போதைப் பொருட்களுடன் 31 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என்று நுவரெலியா தலைமையக பொலிஸ் பரிசோதகர் பிரேம லால் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விருந் தில் பங்கேற்ற இளைஞர்களை 8 பொலிஸ் குழுக்கள் கைது செய்தன.

கைதான சந்தேக நபர்களை நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பிரதான பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.